மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை செய்யப்படும் என்று தான் சொல்லியிருக்கிறேன். முடிவு பரிசீலனை செய்த பின்பு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். இப்போது பஞ்சாயத்து தலை நகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளை தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமா என்று கேட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எந்த மருத்துவ மனையைத் தரம் உயர்த்த வேண்டும், என்ன தேவை அங்கே இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அந்த அடிப்படையில் செய்வதே பொருத்தமாக இருக்கின்ற காரணத்தினால் தலை நகரத்திலே இருப்பது, பஞ்சாயத்து தலை நகரத்திலே இருக்கின்ற மருத்துவமனை என்ற நிலையை எடுத்துக் கொள்ளாமல் எங்கே அவசியம் இருக்கிறதோ, எங்கே தேவை இருக்கிறதோ அங்கே அதை செய்வதற்கான நடவடிக்கையைத் தொடர்ந்து மேற் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 266, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

266—

எட்டான்குளம் கிராமத்திற்குப் பேருந்து வசதி

*15101—: திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம் எட்டான்குளம் கிராமத்திற்குச் செல்ல போதுமான பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போதுமான பேருந்து வசதி ஏற்கனவே உள்ளது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானூர் ஒன்றியம் எட்டான்குளம் அருகில் 7 கிராமங்களுக்கு பஸ்கள் சென்று வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அதில் 1, 2 பஸ்கள் தான் மொத்தமாக விடப்பட்டிருப்பதால் அந்தப் பகுதியிலே ஏராளமான தாய்மார்கள், பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் திருநெல்வேலிக்கோ அல்லது மானூருக்குகோ செல்ல

வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைப் போலவே அந்தப் பகுதியிலிருந்து ஹாஸ்பிடல் வசதிகளுக்கு பாளையங்கோட்டை ஹைகிரவுண்டுக்கு செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதால் போதுமான பஸ் வசதி இல்லாததால் அந்த மக்கள் படிக்கட்டுகளில் எல்லாம் தொங்குகின்ற அளவிலே தாய்மார்கள் எல்லாம் மிகவும் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லும்போது போதுமான பஸ் வசதி இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நான் அங்கே பார்த்த அளவில் கூடுதல் பஸ் வசதி இல்லாததால் மக்கள் இவ்வளவு துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே கூடுதலாக பஸ் வசதியை செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானூரிலிருந்து பிரிந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எட்டான்குளத்திற்காக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 3 பேருந்துகள் 32 நடைகள் அங்கே இயக்கப்படுகின்றன. தனியாரும் மற்றும் இருக்கின்ற பேருந்துகளும் சேர்ந்து ஏறத்தாழ 400 முறை தினசரி அருகே இருக்கும் ஹைகிரவுண்டுக்கு இயக்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே போதும் என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே மக்கள் நெரிசல் அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டால் மீண்டும் பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தினுடைய கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பஸ்கள் பெரும்பான்மையான பஸ்கள் 6 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கின்ற காரணத்தினால் இன்னும் புதியதாக பஸ்கள் விடாததால் அந்த பஸ்கள் மிகவும் பழுதடைந்ததாக இருப்பதனால் பொது மக்களுக்கு அது பெரிதும் தொல்லையாக இருக்கிறது. அது மட்டுமல்ல. இவை போன்ற பஸ்களால் நமக்கு மெயின்டனன்ஸ் காஸ்ட் ஏராளமாக ஆகின்றது. தற்போது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமானது. மிகவும் நஷ்டத்தில் ஓடுவதாகக்கூட சொல்கிறார்கள். ஆதலால் அங்கே புதிதாக பஸ்கள் விடுவதற்கு அந்த கார்ப்பரேஷனுக்கு ஏதாவது நிதி உதவியை அரசு தனியாக ஏற்படுத்தியாவது அல்லது வட்டி குறைந்த ஒரு கடனாவது கொடுத்து அங்கே புதிதாக பஸ்கள் இயக்குவதற்கு செய்ய வேண்டும். ஏனென்றால் திருநெல்வேலி மாவட்டத்தினுடைய கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமானது பஸ் போக்கு

வரத்திலே மிகவும் பின் தங்கிய நிலைமையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்பதை நான் அறிவேன். ஆகையால் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அது குறித்து போக்குவரத்திலே நிதி நிறுவன குழுவிலேயிருந்து 2 கோடி ரூபாய் நிதியாகத் தரச் சொல்லியிருக்கிறோம். குறைந்த வட்டியில், ஆகவே விரைந்து ஓராண்டு காலத்திற்கு பிறகு பழைய பேருந்துகளே அந்த போக்குவரத்துக் கழகத்திலே இல்லாத அளவுக்கு நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே உங்களுக்கு ஒரு கேள்வி அனுமதித்தேன். இது குறிப்பிட்ட இரண்டு ஊர்களுக்கு பஸ் விடுவது பற்றிய கேள்வி. (குறுக்கீடு) திரு. கோபாலகிருஷ்ணன் நீங்கள் அந்த மாவட்டத்துக்காரராக இருக்கலாம். ஆனால் இது குறிப்பிட்ட இரண்டு ஊர் களுக்கு பஸ் விடுவது பற்றிய கேள்வி. ஏற்கனவே இன்று உங்களுக்கு துணைக் கேள்வி ஒன்று கேட்க அனுமதித்தேன். எல்லா உறுப்பினர்களும் இரண்டாவது முறையும் கேட்கக் கூடாது. எனினும் திரு. கோபாலகிருஷ்ணன், கேளுங்கள்.

திரு. வே. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தப்பட்ட அல்லது சுற் றுகள் குறைக்கப்பட்ட பஸ்களை மீண்டும் இயக்கி அந்த கிராம மக்களின் இன்னல்களை நீக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய ஆவலுடன் இருக்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பந்தப்பட்ட கேள்வி யாக இல்லையே!

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற குறிப்புகளுக்கு தனிக்கேள்வி போட்டால் என்னிடத்திலே பதில் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தாங்கள் எழுதித் தருவீர்களானால் உடனடியாக எந்த எந்த இடங்களில்

1993 ஏப்ரல் 7]

அந்த சிங்கிள் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் தெரிவித்தவுடனேயே உடனுக்குடன் இங்கே இன்று சொன்னால் நாளைக் காலையில் அந்தப் பேருந்துகள் அங்கே இயக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 267, திருமதி ரெ. சியாமளா, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

267—

கோவில்பட்டியிலிருந்து சென்னை, கோயம்புத்தூருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்

*16294— திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கும், கோயம்புத்தூருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் புதிதாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோவில்பட்டியிலிருந்து சென்னைக்கு இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கோவில்பட்டியிலிருந்து கோயம்புத்தூருக்கு நேரடியாக பேருந்துகள் இயக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி தொழிற்சாலைகள் அதிகம் நிறைந்த நகரம் ஆகும். தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள நகரம் ஆகும். கோவில்பட்டிக்கும் மற்ற அனைத்து நகரங்களுக்கும் குறிப்பாக கோவை, சென்னை போன்ற நகரங்களுக்கு அதிக வியாபார தொடர்புள்ளதால் எண்ணற்ற பயணிகள் தினமும் மேற்படி சென்னை, கோவை நகரங்களுக்கு அடிக்கடி பயணம் செய்கிறார்கள். எனவே, கோவில்பட்டியிலிருந்து நேரடியாக கோவைக்கு பஸ் இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.